ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2021.05.20 |

## நாணயக் கொள்கை மீளாய்வு : இல.4 – 2021 மே

## இலங்கை மத்திய வங்கி பொருளாதாரத்தின் நீடித்து நிலைக்கும் மீட்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் அதன் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்கிறது

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, 2021 மே 19 ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. பேரண்ட பொருளாதார நிலைமைகளையும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பக்கங்களில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளையும் கவனமாக பரிசீலனையில் கொண்டதன் பின்னர் சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டது. தற்போது நிலவும் தாழ்ந்த பணவீக்கச் சூழல் மற்றும் நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையினால் எழுந்துள்ள புதிய சவால்கள் என்பனவற்றின் பின்னணியில் நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார மீட்சியொன்றிற்கு ஆதரவளிக்கும் பொருட்டு சபையானது தற்போதுள்ள தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினைப் பேணுவதற்குத் தொடர்ந்தும் கடப்பாடு கொண்டுள்ளது.

### கொவிட்-19 உலகாளவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையானது தற்போதுள்ள பொருளாதார செயற்பாடுகளின் மீட்சியில் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது

கிடைக்கக்கூடியதாகவுள்ள குறிகாட்டிகளின் அடிப்படையில் 2020 இன் இரண்டாம் அரையாண்டு மற்றும் 2021 இன் ஆரம்ப காலப்பகுதிகளில் குறிப்பிடத்தக்களவு உத்வேகமடைந்த இலங்கையின் பொருளாதாரமானது தனிமைப்படுத்தல் உட்பட கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் தோற்றம் மற்றும் தொடர்புடைய தடுப்பு வழிமுறைகளின் காரணமாக புதிய இடையூறுகளுக்கு முகங்கொடுக்கின்றது. நகர்வு மீதான தெரிவுசெய்யப்பட்ட கட்டுப்பாடுகளதும் முன்னெடுக்கப்படும் தடுப்புமருந்து வழங்கலினதும் காரணமாக பொருளாதார செயற்பாடுகளின் மீதான அதன் பாதகமான தாக்கங்கள் ஆரம்ப இரண்டு அலைகள் ஏற்பட்ட காலப்பகுதியினை விட குறைவானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படும் வேளையில், உலகளாவிய நோய்த்தொற்றின் இடையூறுமிக்க தன்மையினையும் உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் பொருளாதார மீட்சியினை நீடித்து நிலைக்கச் செய்வதில் எழுந்த சவால்களையும் மூன்றாம் அலை மீண்டுமொருமுறை கோடிட்டுக்காட்டியுள்ளது. இது உறுதிமிக்க மீட்சி செயன்முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தொடர்ச்சியான இறை மற்றும் நாணயக் கொள்கை ஆதரவின் தேவைப்பாட்டினையும் கோடிட்டுக்காட்டியுள்ளது.

**பெருமளவான சவால்களுக்கு மத்தியிலும் வெளிநாட்டுத் துறை தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கிறது**

ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் அதிகரிப்பிலும் பார்க்க இறக்குமதிகளின் மீதான செலவினத்தில் உயர்ந்த அதிகரிப்பின் மூலம் தூண்டப்பட்டு வணிகப்பொருட்களின் வர்த்தகப் பற்றாக்குறை 2021 மாச்சில் விரிவடைந்தது. அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்களில் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியினைப் பார்க்க 2021 சனவரி தொடக்கம் ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக் காணப்பட்டது. இருப்பினும், கொவிட்-19 உலகளாவிய பரவலின் அண்மைய எழுச்சி சுற்றுலாத் துறையின் மீட்சியினைப் பாதிக்கும் வேளையில் வெளிநாட்டுத் துறையில் புதிய சவால்களைத் தோற்றுவிக்கக்கூடும். இலங்கை ரூபா 2021 இன் இதுவரை ஐ.அ.டொலருக்கெதிராக 6.6 சதவீதத்தினால் தேய்வடைந்துள்ளதுடன் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளின் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுச் செலரவணி வெளிப்பாய்ச்சல்கள் என்பன மீதான தற்போதுள்ள கட்டுப்பாடுகளைத் தொடர்வது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மீதான அழுத்தத்தினைத் தளர்த்துவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியாலும் எடுக்கப்பட்ட வழிமுறைகள் இலங்கையின் பொருளாதாரத்தில் நம்பிக்கையை மேம்படுத்தும் பொருட்டு மேலதிக முன்னாயத்த ஏற்பாடுகளுடன் நாட்டுக்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்ள துணைபுரிந்தன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 ஏப்பிறல் இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொ 4.5 பில்லியனாக இறக்குமதிகளின் 3.2 மாதங்களுக்குச் சமனாதரக மதிப்பிடப்பட்டுள்ளன. இது சீன மத்திய வங்கியுடனான இருபுடை நாணயப் பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கவில்லை.

**நிலவுகின்ற வரலாற்றிலேயே குறைவான வட்டி வீதங்கள் தனியார் துறை கொடுகடன் துரிதமடைதலுக்கு வழிவகுத்துள்ளது**

மத்திய வங்கியினால் இதுவரையிலும் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கை தளர்த்தல் வழிமுறைகளின் சென்றடைவினைப் பிரதிபலித்து, சந்தை வட்டி வீதங்கள், அவற்றின் வரலாற்றிலேயே குறைந்த மட்டங்களுக்கான பரந்தளவிலான வீழ்ச்சியொன்றினைக் காண்பித்துள்ளன. நிலவுகின்ற தளர்வுமிக்க நாணயக் கொள்கை நிலையும் உள்நாட்டுச் சந்தையில் பேணப்படும் உயர்வான ரூபா திரவத்தன்மை மட்டமும் பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன் மிக்க துறைகளுக்கு வசதியளிக்கத்தக்க கொடுகடன் வழங்கலினூடாக பொருளாதார மீட்சிக்குத் துணையளிப்பதை நோக்காகக் கொண்டுள்ளன. அதற்கமைய பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளுக்குமான அதிகரித்த கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களுடன் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2021இன் முதல் காலண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சித் துறைக்கான மீள் கடன் வழங்கல் மீதான வங்கிகளுக்கான முன்னுரிமைத் துறை கடன் வழங்கல் இலக்குகளை அறிமுகப்படுத்தியமை பொருளாதாரத்தின் சேவைமிக்க துறைகளுக்கென கொடுகடனை ஊக்குவிப்பதற்கு மேலும் தொடர்ச்சியாக ஆதரவளிக்கும். அதேவேளை, வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசாங்கத் துறையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன், 2021இன் முதல் காலாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் உயர்வடைந்தது. அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட செலவுகள் உள்ளடங்கலாக வருவாயில் வீழ்ச்சி அத்துடன் செலவினத்தில் அதிகரிப்பு என்பவற்றுக்கு மத்தியில் அரசாங்கத்தின் அதிகரித்த நிதியிடல் தேவைப்பாட்டின் தாக்கத்தினைப் பிரதிபலித்து சில அதிகரிப்புக்களைக் காண்பித்தன. விரிந்த பண ($M_{2b}$) வளர்ச்சியைத் தோற்றுவித்த உள்நாட்டு கொடுகடன் விரிவாக்கம் உயர்வடைந்து காணப்படும்.

**பணவீக்கமானது அண்மித்த நடுத்தர காலத்தில் 4-6 சதவீத வீச்சினுள் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை நடுத்தரகாலம் மீதான எவையேனும் அழுத்தங்கள் தோதான வழிமுறைகளைக் கொண்டு கையாளப்படும்**

பணவீக்கமானது நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் அத்துடன் குறைவடைந்த ஒன்றுதிரண்ட கேள்வி நிலைமைகள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு 2021ஆம் ஆண்டின் இதுவரையிலும் குறைவடைந்தே காணப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலை அதேபோன்று பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக வழங்கல் பக்க இடையூறுகள் மூலம் தூண்டப்பட்ட அண்மித்த காலத்தில் சில பணவீக்க அழுத்தங்கள் தோன்றக்கூடிய அதேவேளை, ஆண்டின் எஞ்சியுள்ள காலப்பகுதியில் பணவீக்கம் 4-6 சதவீதம் கொண்ட விரும்பப்பட்ட இலக்கு வீச்சினுள் பொதுவாககக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இறை மற்றும் நாணயத் தூண்டல் வழிமுறைகள் என்பவற்றின் தாக்கங்கள் திரண்ட தேறிய நிலைமைகளின் எதிர்பார்க்கப்பட்ட மேம்படுத்தல்களுடன் நடுத்தரகாலத்தில் பணவீக்கம் மீது சில மேல்நோக்கிய அழுத்தத்தினை நெருக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் அவ்வாறான அழுத்தங்கள் மத்திய வங்கியின் உரியகால வழிமுறைகள் ஊடாக கணிக்கப்படவுள்ளன. இதனூடாக நடுத்தரகாலத்தில் நடுஒற்றை இலக்க மட்டங்களில் பணவீக்கத்தினைப் பேணுவதனை உறுதிசெய்கின்ற அதேவேளை, எதிர்வரவுள்ள காலப்பகுதியில் நிலையான அத்துடன் உயர்வான பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிக்கப்படும்.

**கொள்கை வீதங்கள் தற்போதைய மட்டங்களில் பேணப்படுகின்றன**

மேலே குறிப்பிடப்பட்டவாறான தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, நாணயச் சபையானது, தற்போதைய தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையானது பொருத்தமானது எனக் கருதுகின்றது. அதற்கமைய, கொள்கை வட்டி வீதங்களை அதாவது மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 4.50 சதவீதம் மற்றும் 5.50 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதென சபை தீர்மானித்துள்ளது. மத்திய வங்கியானது உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் சந்தை அபிவிருத்திகளைத் தொடர்ந்தும் கண்காணிக்கும் என்பதுடன் உள்வளர்ச்சிப் பாதையிலை நிலைநிறுத்துவதற்கு பொருளாதாரத்திற்கு உதவுகின்ற அதேவேளை நெகிழ்வுமிக்க பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் இலக்கிடப்பட்ட 4-6 சதவீத வீச்சினுள் பணவீக்கத்தினைப் பேணுவதற்கு உதவுவதற்கு மேலும் முனைப்பான வழிமுறைகளை எடுப்பதற்கு தயாராகவுள்ளது.

**நாணயக் கொள்கை தீர்மானம்: கொள்கை வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு வீதங்கள் மாற்றமடையவில்லை**

| | |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 4.50% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 5.50% |
| வங்கி வீதம் | 8.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 2.00% |

**தகவல் குறிப்பு:**

மெய்நிகரான நாணயக் கொள்கை ஊடாக மாநாடு 2021 மே 20ஆம் திகதி அன்று மு.ப. 11.00 மணிக்கு ஷூம் வாயிலாக இடம்பெறும் என்பதுடன் முகநூல் மீது நேரலையாக இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2021 யூலை 08ஆம் நாள் வெளியிடப்படும்.

இணைப்பு I

## தரவு இணைப்பு

### அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | செத் 20 | ஒத் 20 | நவெ 20 | திசெ 20 | சன 21 | பெப் 21 | மாச் 21 | ஏப் 21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 4.0 | 4.0 | 4.1 | 4.2 | 3.0 | 3.3 | 4.1 | 3.9 |
| | தேநுவிசு(2013=100) | 6.4 | 5.5 | 5.2 | 4.6 | 3.7 | 4.2 | 5.1 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 2.9 | 3.0 | 3.0 | 3.5 | 2.7 | 2.6 | 3.1 | 3.0 |
| | தேநுவிசு(2013=100) | 4.8 | 4.5 | 4.5 | 4.7 | 4.2 | 4.1 | 4.3 | - |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### அட்டவணை 02: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நவெ 20 | திசெ 20 | சன 21 | பெப் 21 | மாச் 21 | நவெ 20 | திசெ 20 | சன 21 | பெப் 21 | மாச் 21 |
| ஒதுக்குப் பணம் | 936 | 964 | 976 | 978 | 1,029 | 1.9 | 3.4 | 4.3 | 1.5 | 1.5 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 9,136 | 9,406 | 9,533 | 9,651 | 9,839 | 22.3 | 23.4 | 23.7 | 23.8 | 21.5 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (281) | (209) | (321) | (386) | (430) | -390.1 | -308.0 | -458.9 | -496.1 | -1,629.0 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 9,417 | 9,615 | 9,854 | 10,037 | 10,269 | 27.7 | 27.8 | 29.4 | 30.4 | 27.2 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 4,363 | 4,548 | 4,758 | 4,793 | 5,005 | 61.5 | 62.7 | 63.1 | 61.9 | 54.7 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 1,011 | 1,002 | 1,058 | 1,080 | 1,098 | 25.9 | 22.5 | 29.0 | 29.7 | 26.5 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 6,094 | 6,171 | 6,197 | 6,276 | 6,388 | 6.2 | 6.5 | 6.9 | 7.8 | 7.5 |
| விரிந்த பணம் ($M_4$) | 11,194 | 11,462 | 11,643 | 11,790(a) | 12,010 | 20.8 | 21.4 | 21.6 | 21.9 | 20.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | நவெ 20 முடிவில் | திசெ 20 முடிவில் | சன 21 முடிவில் | பெப் 21 முடிவில் | மாச் 21 முடிவில் | ஏப் 21 முடிவில் | 2021 மே 19இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 4.50 | 4.50 | 4.50 | 4.50 | 4.50 | 4.50 | 4.50 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 5.50 | 5.50 | 5.50 | 5.50 | 5.50 | 5.50 | 5.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 4.54 | 4.55 | 4.55 | 4.55 | 4.62 | 4.64 | 4.67 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 4.64 | 4.69 | 4.69 | 4.90 | 5.05 | 5.11 | 5.12 |
| 182-நாள் | 4.76 | 4.80 | 4.75 | 4.99 | 5.10 | 5.14 | 5.14 |
| 364-நாள் | 5.00 | 5.05 | 4.98 | 5.09 | 5.11 | 5.18 | 5.18 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 5.83 | 5.81 | 5.90 | 5.76 | 5.78 | 5.86 | 5.72 (அ) |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 10.55 | 10.29 | 10.17 | 10.08 | 9.91 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 8.71 | 8.38 | 8.37 | 8.26 | 8.28 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 6.01 | 5.80 | 5.58 | 5.36 | 5.20 | 5.07 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 7.37 | 7.14 | 6.88 | 6.53 | 6.29 | 6.09 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 4.96 | 4.93 | 5.19 | 4.96 | 4.86 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 5.07 | 5.08 | 5.30 | 5.09 | 4.99 | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*